| | | | |
|---|---|---|---|
| Headline | FRIM's Canopy Walkway to be closed in June | | |
| MediaTitle | Malaysian Nanban (Sunday) | | |
| Date | 02 Jul 2017 | Color | Full Color |
| Section | News | Circulation | 115,000 |
| Page No | 6 | Readership | 523,000 |
| Language | Tamil | ArticleSize | 57 cm² |
| Journalist | NULL | AdValue | RM 387 |
| Frequency | Daily | PR Value | RM 1,161 |



# மலேசிய வன ஆராய்ச்சி மையத்தின் தொங்கும் பாலம் மூடப்படுகிறது



கோலாலம்பூர், ஜூலை 2-

மலேசிய வன ஆராய்ச்சி மையத்தில் (FRIM) அமைந்திருக்கும் கால் நூற்றாண்டு பழமையான தொங்கும் பாலம் மறுசீரமைப்பு பணிக்காக தற்காலிகமாக மூடப்பட்டது.

1992ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்தத் தொங்கும் பாலம் மக்களிடையே மிகவும் பிரசித்தி பெற்ற பாலமாகும். இயற்கை அழகை இரசிக்கவும் காடுகளைச் சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் மக்கள் இந்த பாலத்தை பயன்படுத்துவதுண்டு. இப்பாலம் கடல் மட்டத்திலிருந்து 300 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இது 150 மீட்டர் நீளம் கொண்டது.

பொதுவாகவே ஒரு தொங்கும் பாலத்தின் ஆயுள் கால்நூற்றாண்டுகள் அல்லது இன்னும் ஓரிரு ஆண்டுகள் வரை தாக்கு பிடிக்கும். ஆனால், எண்ணிலடங்க சுற்றுலா பயணிகளாலும் புயலின் தாக்குதலாலும் இந்தப் பாலம் மிகுந்த சேதம் அடைந்துள்ளது.

குறிப்பாக, 2015இல் ஏற்பட்ட புயல் தாக்குதலால் இந்தப் பாலத்தைத் தாங்கிப் பிடித்திருக்கிற மரங்கள் வெகுவாக பாதித்துவிட்டதால் உடனே மறுசீரமைப்பு செய்ய வேண்டும் என்று சுற்றுச்சூழல் மற்றும் நகர்ப்புற வனவியல் திட்ட தலைவர் டாக்டர் நூர் அஸ்லின் கூறினார்.

இதனிடையே, பாலம் அதிகம் சேதமடைந்து விட்டதால் இதனை உடனடியாக மூடுவதே நல்லது என வனவியல் மற்றும் சுற்றுச் சூழல் பிரிவு உதவி ஆராய்ச்சி அதிகாரி வான் முகமது நபிசுல் வான் அமாட் தெரிவித்தார்.

அதுமட்டுமல்லாமல், பாதிக்கப்பட்ட மரங்கள் இழந்த சத்துகளை மீண்டும் பெற்று செழிப்புற பழைய பாலத்தின் நிலையை மாற்றி புதிய இடத்தில் பாலம் நிர்மாணிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

Powered by: isentia